**அனுப்புநர்**

........................................................
இளநிலை பொறியாளர் முதல் நிலை
........................................................ பிரிவு
........................................................கோட்டம்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
........................................................

**பெறுநர்**

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம், இளநிலை பொறியாளர் முதல் நிலை (மின்னியல்) பதவியில் - 14 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்துள்ள பொறியாளர்களுக்கு - உதவி செயற்பொறியாளர் (NI) பதவி உயர்வு - வழங்கிட வேண்டுதல் - தொடர்பாக.**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நேரடி நியமனம் மூலம் பட்டய பொறியாளருக்கு உள்ள பதவியில் பணியில் சேர்ந்து, கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகிறேன். மேலும் கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக இளநிலைப் பொறியாளர் முதல் நிலை (மின்னியல்) பதவியில் பணிபுரிந்து வருகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காலவரையறை செய்யப்பட்ட (Time Bound) பதவி உயர்வு வழங்கிட வேண்டும் என தொழிற்சங்கங்கள் நீண்ட காலமாக முறையீடு செய்து வரும் நிலையிலும், மின்வாரியம் இது நாள் வரையிலும் இதன் மீது முடிவெடுக்காத நிலையே உள்ளது.

இந்த சூழலில், மின் வாரியத்தில் தற்போது விகிதாச்சாரம் மற்றும் காலியிடங்கள் அடிப்படையில் பதவி உயர்வுகள் அளிக்கப்படுவதால், ஒரே நேரத்தில் மின் வாரியத்தில் சம கல்வித் தகுதியோடு, ஒரே பதவியில் பணியில் சேர்ந்தவர்கள் ஒரு பகுதியினர் உயர் பதவியிலும் ஒரு பகுதியினர் அதற்கு கீழ் உள்ள பதவியிலும் பணிபுரியும் நிலையும், ஓய்வு பெறும் நிலையும் உள்ளது. மேலும் சில பதவிகளில் எங்களுக்கு பின்னால் எங்களை விட குறைவான கல்வித் தகுதியோடு, எங்களை விட குறைவான சம்பளத்தில் வேறு சில பதவிகளில் பணியில் சேர்ந்தவர்கள் தற்போது எங்களை விட கூடுதலான சம்பளத்தில், பதவியில் பணி புரிந்து ஓய்வு பெறும் நிலையும் உள்ளது.

எனவே சம நிலையில் இருக்க வேண்டியவர்களிடையே, பதவியில் ஏற்றத்தாழ்வும், சம்பளம் மற்றும் ஓய்வூதிய பலன்கள், ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வும், பாதிப்பும் ஏற்படுகிறது. இதனால் மின் வாரியத்தின் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்துள்ள ஒரு பகுதியினர் மிகுந்த மன உளைச்சலோடும் மன அழுத்தத்தோடும், மன வருத்தத்தோடும் பணியாற்றும் நிலை உள்ளது.

மின்வாரியம் அவ்வப்போது சில பதவிகளில் மேற்கண்ட சூழல் ஏற்படும் போது, அடுத்த மேல் பதவிகளுக்கு செல்ல வாய்பில்லாத நிலை ஏற்படும் போது, அதை சீர்படுத்திட Supper Numery(SN),Non Indepedent (NI) என பதவி உயர்வு வழங்கி முரண்பாடுகளை சரி செய்துள்ளது. அதாவது கணக்கீட்டாளரில் இருந்து கணக்கீட்டு ஆய்வாளர் (SN), உதவியாளர் (கணக்கு) ல் இருந்து பிரிவு அலுவலர் (NI), உதவிப்பொறியாளரில் (கட்டிடவியல்) இருந்து உதவி செயற்பொறியாளர் (NI), உதவி செயற்பொறியாளர் (இயந்திரவியல், கட்டிடவியல்) இருந்து செயற்பொறியாளர் (NI) மற்றும் செயற்பொறியாளர் (கட்டிடவியல்) இருந்து மேற்பார்வை பொறியாளர் (NI) ஆகிய பதவி உயர்வுகளை கடந்த காலங்களில் அளித்து பாதிப்புகளை மின் வாரியம் சரிசெய்துள்ளது.

இந்நிலையில், இளநிலைப்பொறியாளர் முதல் நிலை (மின்னியல்) பதவியில் கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக 500 க்கும் குறைவானவர்கள் பணி புரிந்து வருகின்றனர். நாங்கள் அனைவரும் தற்போது, உதவி செயற்பொறியாளருக்கான கிரேடு-பே வும் பெற்று வருகிறோம். எங்களுக்கு வாரியம் உதவி செயற்பொறியாளர் (NI) வழங்குவதன் மூலம் எங்களுக்கு பணப்பயன் என்பது ஒரு ஆண்டு உயர்வு அதாவது 3% ஆக மட்டுமே இருக்கும்.

எனவே மின் வாரியம் எங்களுடைய இந்த குறைபாட்டினை சீர்செய்திட, மற்ற பதவிகளில் பணிபுரிந்தவர்களுக்கு ஏற்கனவே சீர்படுத்தியுள்ளது போல எங்களுக்கும் உதவி செயற்பொறியாளர் (NI) பதவி உயர்வு வழங்கி, ஓய்வு பெறும் நிலையில் உள்ள எங்களின் மன அழுத்ததையும், மன உளைச்சலையும் போக்கி நாங்கள் மன நிறைவுடன் பணியாற்றிட / பணி ஓய்வு பெற்றிட தாங்கள் உதவி செய்திட மிகவும் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.

நாள்:                                                    தங்கள் உண்மையுள்ள

இடம்: